# அரவணைப்பு

## --சாந்தா

விருகம்பாக்கத்தில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில்,பிரபல ஐ டி கம்பெனியில் பணியாற்றும் கணேசன், இல்லத்தரசியான மனைவி கோகிலா, ஒன்பதாவது வகுப்பு படிக்கும் மகன் அரவிந்த் ஆகியோரோடு வசித்து வந்தார்.

கணேசன் தினசரி அதிகாலை வேலைக்கு கிளம்பிச் சென்று இரவு வீடு திரும்புவார். கோகிலா கணேசனுக்குச் சாப்பாடு கட்டிக் கொடுத்து விட்டு, மகன் அரவிந்தைப் பள்ளி வேனில் ஏற்றிவிட்டு, வீட்டு வேலைகளைக் கவனிப்பது தினசரி வழக்கம். மாலை பள்ளியில் இருந்து திரும்பி வந்ததும், அரவிந்திற்கு படிப்பு சொல்லி குடுத்து விட்டு, அனைவருக்கும் இரவு உணவு செய்து, பத்து மணிக்கு படுப்பது கோகிலாவின் அன்றாடப் பணிகள்.

அரவிந்த் துருதுருவென இருப்பான். அனைவருக்கும் அரவிந்தை ரொம்பப் பிடிக்கும். அவனைக் கொஞ்சி மகிழ்வார்கள்.படிப்பிலும் கெட்டி. விளையாட்டிலும் கெட்டி. கணேசன் கோகிலா தம்பதியினருக்கு வெகு காலம் கடந்து பிறந்த குழந்தையாகையால் மிகுந்த செல்லம் கொடுத்து வளர்த்து வந்தனர்.அவன் கேட்டதையெல்லாம் வாங்கிக்கொடுத்து மகிழ்வித்து வந்தனர்.

இந்த சமயத்தில், கணேசன் கோகிலா தம்பதியருக்கு, இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது. அருண் என்று பெயரிட்டு, வளர்க்க ஆரம்பித்தார்கள். அவர்கள் கவனமெல்லாம் அருண் பக்கம் திரும்பத் துவங்கியது.

கொஞ்ச நாட்களாக, அரவிந்தின் போக்கில் மாற்றம் ஏற்பட்டதை கோகிலா உணர ஆரம்பித்தாள்.

கணேசனிடம் “அரவிந்த் இப்போதெல்லாம் முன்ன மாதிரி ஒழுங்கா பேசுறது இல்ல. ஸ்கூல்ல இருந்து வந்ததும் அவன் ரூமுக்குப் போய் கதவைப் பூட்டிகிறான். ஒழுங்கா சாப்டறது இல்ல. மார்க்கும் கம்மியாகிக்கிட்டே வருது. என்னன்னு கொஞ்சம் பாருங்க”

கணேசன் அரவிந்தை கூப்பிட்டு மென்மையாக விசாரித்தார்.

“நான் எப்போதும் போலத்தான் இருக்கிறேன். எனக்கு எந்த பிரச்சனையும் இல்ல இல்லப்பா”அரவிந்த்.

“ஏதாவது பிரச்சினைன்னா சொல்லுடா”

“எனக்கு ஒன்னும் பிரச்சினை இல்லப்பா”

பள்ளியில் இருந்து, அரவிந்த் வரும்போதெல்லாம் “அண்ணா” என்று மழலை குரலில் கூப்பிட்டவாறே, அரவிந்தை நோக்கி வரும் போதெல்லாம் , அருணைத் தவிர்த்துவிட்டு, நேராக தன்னுடைய ரூமுக்கு சென்று கதவை அடைத்து விடுவான் அரவிந்த்.

திடீரென அருணுக்கு விடாது காய்ச்சல் அடிக்க ஆரம்பித்தது. வழக்கமாக செல்லும் குழந்தைகள் மருத்துவரிடம் அருணைக் காண்பித்தார்கள்.பல பரிசோதனைகளுக்குப் பின் அருணை ரத்தப் புற்று நோய் தாக்கியிருப்பது தெரிய வந்தது. கோகிலாவும், கணேசனும் அதிர்ந்து போய் விட்டார்கள்.

மருத்துவர் சிகிச்சைகளை ஆரம்பித்தார் .அடிக்கடி அருணை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றும், சில நாட்கள் மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெற்று வருவதுமாக இருந்தனர். சிகிட்சைகளில் நல்ல முன்னேற்றம் தெரிய ஆரம்பித்தது.

கோகிலாவின் அம்மா, அருணைக் கவனித்துக் கொள்ள , உதவிக்கு வந்து தங்கியிருந்தார்.

ஒரு நாள் அரவிந்தின் ஆடைகளை துவைக்க எடுக்கும் போது ஒரு சிகரெட் பாக்கெட், அவன் கால்சட்டைப் பையில் இருந்ததைப் பார்த்து அதிர்ந்து போன கோகிலா, அரவிந்தைக் கூப்பிட்டு விசாரித்தாள்.

“யாரோ பிரண்டு என் பாக்கெட்ல வச்சிருப்பமா. எனக்கு தெரியாது அத பத்தி” என்று மறுத்துவிட்டான்.

இதற்கிடையே பள்ளிக்கு ஒழுங்காக வருவதில்லை என்று பள்ளியில் இருந்து கடிதம் வந்தது.

கோகிலா மிகுந்த கவலைக்குள்ளானாள் .

கிளையண்ட் மீட்டிங்கிற்காக ஜெர்மனி சென்றிருந்த கணேசனிடம் விஷயத்தைக் கூறினாள்.

“இன்னும் பத்து நாட்களில் வந்து விடுவேன்.வந்து அரவிந்திடம் பேசுகிறேன்.எல்லாம் சரியாகிவிடும்.கவலைப்படாதே.” என்று ஆறுதல் கூறினான்.

அடுத்த நாள் அருணை பரிசோதனைக்காக மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றபோது மருத்துவரிடம் அரவிந்தின் மாறிக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றிக் கூறி “என்ன

செய்வது" என்று விசாரித்தாள்.மருத்துவர் அரவிந்தைக் கூட்டி வருமாறு கூறினார். அரவிந்த் மருத்துவமனைக்கு வருவதற்கு மறுத்துவிட்டான்.

"எனக்கு என்ன உடம்புக்கு? நான் நல்லாத்தான் இருக்கேன்.நான் வர மாட்டேன்" என்றான்.

"மருத்துவர் உனக்கு தெரிந்தவர்தானே? அவர், உன்னைப் பார்க்க விரும்புகிறார்.ஒரு தடவ வந்துட்டு போ" என்று வலுக்கட்டாயமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள்.

மருத்துவர் அரவிந்திடம் பேசிவிட்டு, அவனை வெளியே இருக்கச் சொல்லி விட்டு கோகிலாவிடம்,"நீங்கள் ஒரு சைக்கியாட்ரிஸ்ட்டைப் பார்ப்பது நல்லது.எனது நண்பர் இருக்கிறார். என் உதவியாளரிடம், அவரின் எண்ணை வாங்கி, அவரிடம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கி , அவரைப் பாருங்கள்"என்றார்.

இரண்டு நாட்கள் கழித்து சைக்கியாட்ரிஸ்ட் அப்பாயிண்ட்மெண்ட் கிடைத்தது.

அரவிந்த் கோபத்தின் உச்சிக்குச் சென்று விட்டான் ."

நான் என்ன லூசா.என்னால வர முடியாது"என்று கத்த ஆரம்பித்தான்.

ஒரு பக்கம் அருணின் உடல் நிலை.மறு பக்கம் அரவிந்தின் போக்கு , செய்வதறியாது திகைத்தாள் கோகிலா.

ஒருவழியாக சைக்கியாட்ரிஸ்ட்டைப் பார்ப்பதற்கு அரவிந்தை ஒப்புக்கொள்ளசெய்து,கூட்டிச் சென்றாள்.

அரவிந்தைப் பரிசோதித்த சைக்கியாட்ரிஸ்ட், கணேசனை அரவிந்திடம் அதிக நேரம் செலவிட்டு அவனுக்கு ஆதாரவாகப் பேசச் சொல்லுமாறு கூறினார்.

"டாக்டர், இப்போ அவர் ஜெர்மனி போயிருக்கார். இங்க இருந்தாலும் அவர் டெய்லி காலைல போயிட்டு ராத்திரிதான் வருவார். வீட்டில் இருக்கும் போதெல்லாம், லேப்டாப்பை வைத்துக்கொண்டு,ஆபீஸ் வேலையைப் பார்க்க ஆரம்பிச்சுவிடுவார்"

"உங்க இரண்டு பேரோட அரவணைப்பு அரவிந்துக்கு இப்போ தேவைப்படுத்தும்மா"

மேலும் அரவிந்தை ஒரு சைக்கலாஜி கவுன்சிலரிடம் கூட்டிச் செல்லுமாறு பரிந்துரைத்தார்.

அரவிந்திற்கு அது சுத்தமாக பிடிக்கவில்லை. கோகிலா கெஞ்சிக் கேட்டுக் கொண்டதால், "இதுதான் லாஸ்ட் .இதுக்கு மேல எதுக்கும் நான் வரமாட்டேன் "என்று கூறினான் அரவிந்த்.

சைக்காலஜி கவுன்சிலர் கோகிலாவிடம்" குறைந்தது நான்கு அல்லது ஐந்து கவுன்சலிங் செசன்ஸ் தேவைப்படும் என்று கூறி , நாட்களையும் நேரத்தையும் குறித்துக் கொடுத்தார்.

முதல் இரண்டு செசன்ஸ் முடிந்தது.அரவிந்திடம் பெரிதாக எந்த மாற்றமும் தெரியவில்லை.

இன்று மூன்றாவது செசன்.

அரவிந்த் கவுன்சிலர் அறைக்குள் நுழைந்தான்.

கோகிலா பதைபதைப்போடு வெளியே அமர்ந்திருந்தாள்.

முடிந்த இரண்டு செசன்களில் கவுன்சிலர் மேல் அரவிந்திற்கு ஓரளவு நம்பிக்கை வந்திருந்தது.

அரவிந்தை அமரச் சொன்ன கவுன்சிலர் , அரவிந்தைப் பார்த்து,"இப்போது நானும், நீயும் நண்பர்கள். இப்போ சொல்லு . உன் பிரச்சனை என்ன? நான் தீர்த்து வைக்க பார்க்கிறேன்"

"சார், சிறு வயது முதலே, அப்பா அம்மா என் மீது ரொம்ப அன்பு கொண்டிருந்தார்கள். நான் கேட்டதையெல்லாம் வாங்கி கொடுத்தார்கள்.நான் என்ன செஞ்சாலும் பாராட்டி உற்சாகப்படுத்தினார்கள்.

ஆனால் என் தம்பி அருண் பிறந்ததும் அவர்களுடைய கவனமெல்லாம் அருண் மேலே போய் விட்டது.என்ன யாரும் கண்டுகொள்றதில்ல. வீட்டுக்கு வருவதுக்கே வெறுப்பா இருக்கு. என்னுடைய நண்பர்கள் சிலரோட சுத்த சுற்ற ஆரம்பித்தேன்.அவர்களோடு இருக்கும் நேரம் எனக்கு சந்தோஷமா இருந்தது.சிகரெட் பழக்கம் அவர்களிடமிருந்து எனக்குத் தொற்றியது. அது தப்பு என்று எனக்குத் தெரிந்திருந்தாலும்,எனக்கு வேறு வழி தெரியவில்லை. வகுப்பை கட் செய்து கொண்டு அவர்களோட ஊரைச் சுத்த ஆரம்பித்தேன்.அதுவும் தப்புன்னு எனக்கு நல்லாத் தெரிஞ்சாலும், எனக்கு அது ஒரு நிம்மதியை கொடுத்தது. வீட்டில் எனக்குன்னு கவலைப்பட யாரும் இல்லை சார். அருணைப் பார்த்தாலே எனக்கு கோபம் கோபமாக வருகிறது"

கவுன்சிலர் அரவிந்தை நோக்கி,"அரவிந்த் இதுதானா உன் பிரச்சனை .அருண் உன்னுடைய தம்பி தானே. அவன் ஒரு சிறு குழந்தை. அவனுக்கு சுற்றியிருப்பவர்களின் கவனம் அதிகமாகத் தேவைப்படுகிறது.அதனால் அவர்களுக்கு உன்னை பிடிக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. உன்னைப் பார்த்துதானே ,உன்போல், அவனும் வளருவான். நல்லா யோசித்துப் பார். நீ ஒரு

ரோல்மாடலா உன் தம்பிக்கு வாழ்ந்து காட்ட வேண்டாமா? நான் சொன்னதையெல்லாம் நல்லா யோசி.இப்போதைக்கு வெளியில் சென்று வெயிட் பண்ணு. உன் அம்மாவை உள்ளே அனுப்பி வை”

"சரி சார்"

கோகிலா கவுன்சிலரிடம் வந்தார்.

“அம்மா, நான் அரவிந்துகிட்ட பேசியிருக்கேன். மாறிடுவான்மா. கவலைப்படாதீங்க. நீங்க, அருணோட நோயைப் பற்றி அரவிந்திடம் சொல்லிட்டீங்களா?”

“இல்லை சார். காய்ச்சல்ன்னுதான் சொல்லிருக்கேன்”

“இப்பவே வீட்டுக்குப் போகும் போது, எதையும் மறைக்காமல், அருணுக்கு என்ன நோய்ன்னு தெளிவாக சொல்லிருங்க.கொஞ்ச நாள் பாருங்க. ஒருவேளை அரவிந்த்கிட்டே எந்த மாற்றமும் தெரியாட்டா , மீண்டும் கூட்டிட்டு வாங்க.

வீட்டுக்கு ஆட்டோவில் திரும்பும்போது, அரவிந்திடம், அருணுக்கு வெறும் காய்ச்சல் அல்ல. அவனைத் தாக்கியது ரத்தப் புற்றுநோய் என்று கூறினாள்.

அரவிந்த் அதிர்ச்சியுற்றுப் போனான்.

வீட்டுக்குள் வந்து கதவைத் திறந்ததும், பாட்டியின் மடியில் படுத்திருந்த அருணை ஓடிச்சென்று, தூக்கி, தோளில் சாய்த்துக்கொண்டு அழ ஆரம்பித்தான் அரவிந்த் .

---

ப.சொக்கலிங்கம் , 62 விக்டோரியா கார்ட்னஸ் ,20,ஜவஹர்லால் நேரு சாலை, கோயம்பேடு,சென்னை 600107

M:9940084290 Email:chockalingam66@gmail.com

---